

தி.மு.க. பொறியாளர் அணி, வர்த்தகர் அணி, நெசவாளர் அணி, அயலக அணி ஆகிய அணிகளின் மாநில நிர்வாகிகளின் ஆலோசனைக் கூட்டம் சென்னை, அண்ணா அறிவாலயம் கழக அலுவலகத்தில் துணைப் பொதுச் செயலாளர் திருச்சி சிவா எம்.பி. தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பொறியாளர் அணிச் செயலாளர் கு.கருணாநிதி, தலைவர் துரை கி.சரவணன், வர்த்தகர் அணிச் செயலாளர் காசி முத்துமாணிக்கம், நெசவாளர் அணி துணைத் தலைவர் ஓ.ஏ.நாகலிங்கம், செயலாளர் சிந்து ரவிச்சந்திரன், அயலக அணிச் செயலாளர் எம்.எம். அப்துல்லா, எம்.பி., ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. ஆலோசனைக் கூட்டத்தில் 4 அணிகளின் மாநில நிர்வாகிகள் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் 5 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



முத்தமிழறிஞர் கலைஞரின் 102 ஆவது பிறந்தநாள் விழா சிங்கப்பூரில் கழக நண்பர்களால் கொண்டாடப்பட்டது. இதில் ரத்த தானமும் கலைஞர் உருவப்படத்துக்கு மலர் தூவி மரியாதை செய்யப்பட்டன. இதில் சிறப்பு அழைப்பாளராக முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கழக கொள்கை பரப்பு இணைச்செயலாளர் நெல்லிக்குப்பம் புகழேந்தி கலந்துகொண்டு தலைவர் கலைஞர் அவர்களின் வரலாற்று நினைவுகளை எடுத்துரைத்து சிறப்பித்தார். இதில் திமுக நிர்வாகிகள் செந்தில்குமார் , நரசிம்மன்,சந்திரசேகரன் திருச்சி செல்வராஜ், ஆரிப், புதுக்கோட்டை தெய்வானை, மணிமாறன்,செந்தில்ராஜா, ஆறுமுகம், கோவைசெல்வி,சிங்காரவேலன் ,வீரராகவன் ,எம்.ஜி.ஏ.அஜ்மீர் அலி,மெய்யர் சரவணன்,கணபதிசுந்தரம், கிறிஸ்டி,ரமேஷ்,ராஜா செல்லபிள்ளை, மது, கணேசன், தேவன் ,லோகநாதன், உடைமணி, தீனா, சீனு,ராஜா,மற்றும் கழக நண்பர்கள் கலந்துகொண்டனர்.

### அனைத்துத் தரப்பினரின் வாழ்விலும் புதிய விடியல் தந்த

# திராவிட மாடல் அரசின் சாதனைகளை மக்களிடம் எடுத்துரைப்போம்!

## தென்காசி வடக்கு மாவட்ட செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம்! ஈ.ராஜா எம்.எல்.ஏ. சிறப்புரை!

தென்காசி.ஜூன்.6–

தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க செயற்குழுக் கூட்டம் சங்கரன்கோவில் ரயில்வே பீடர் சாலையில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட அவைத்தலைவர் கோ.சுப்பையா தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ பங்கேற்று பல்வேறு ஆலோசனைகளை வழங்கி சிறப்புரை யாற்றினார்.

நிகழ்வில் தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.ராணி ஸ்ரீகுமார் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ச.தங்கவேலு,பரமகுரு, மாநில மருத்துவரணி துணைச் செயலாளர் செண்பகவிநாயகம்,மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் முத்துச்செல்வி,மாவட்ட பொருளாளர் இல.சரவணன், துணைச் செயலாளர்கள் ராஜதுரை, மனோகரன், புனிதா, பொதுக்குழு உறுப்பினர்கள் சாகுல் ஹமீது, வேல்சாமி பாண்டியன், தேவதாஸ்,மகேஸ்வரி,பா.மாரிச்சாமி,

ஒன்றிய செயலாளர்கள் லாலா சங்கரபாண்டியன்,பொன்.முத்தையா பாண்டியன்,கடற்கரை, பூசை பாண்டியன், சேர்மதுரை கிறிஸ்டோபர், குணசேகரன், பெரிய துரை, ராமச்சந்திரன், வெள்ளத்துரை, பால்ராஜ், நகரச் செயலாளர்கள் பிரகாஷ், அந்தோணிசாமி, நாகூர்கனி, பேரூர் செயலாளர் குருசாமி, ரூபி. பாலசுப்பிரமணியன், மாரிமுத்து, சேதுசுப்பிரமணியன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



இந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு.

சட்டமன்றத் தொகுதியில் அமைக்கப்பட்டுள்ள பூத் கமிட்டிகள் மூலம் ஒவ்வொரு வாக்குச்சாவடிகளிலும் குறைந்தபட்ச 30 சதவீதம் வாக்காளர்களை கழகத்தின் உறுப்பினர்களாக இணைத்திட இலக்கு நிர்ண யிக்கப்பட்டுள்ளதால் புதிய உறுப்பினர்களின் சேர்க்கும் பணியினை மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, கிளைக் கழகச் செயலாளர்கள் நிறைவேற்றவும், தொகுதி பார்வையாளர்கள் மற்றும் மாவட்ட செயலாளர்கள் மேற்பார்வையிடவும் வேண்டுமென தீர்மானிக்கப்படுகிறது.

நடைபெற்ற கழகப் பொதுக் குழுவில் வைத்து நிறைவேற்றப்பட்ட சட்ட திட்ட திருத்த புதிய பிரிவுகளான அணி கல்வியாளர்அணி மாணவர்களுக்கு கல்வியின் சேவையையும் முக்கியத்துவத் தையும் எடுத்துக் கூறி அவர்கள் கல்வி பயில வேண்டியதன் அவசியத்தை பரப்பவும்,அறிவியல் சார்ந்த அறிவார்ந்த கல்வி முறையை தேர்ந்தெடுத்துப் படிப்பது எந்த அளவுக்கு அவர்களது வாழ்வியலை வளமாக்கும் என்பதை எடுத்துச் சொல்லவும்,கல்வியில் இடைநிற்றலை தடுத்து நிறுத்திடவும், ஆசிரியர்கள், பேராசிரியர்கள் நலன் கருதி கல்வியாளர்கள் மற்றும் அறிவியல் அறிஞர்களை கொண்ட கல்வியாளர் அணி உருவாக்கவும். மாற்றுத்திறனாளிகள்அணி தங்களின் அறிவாற்றலால் பல்வேறு திறன்களை பெற்றுள்ள மாற்றுத்திறனாளிகள் அனைத்து உரிமைகளையும் பெறுவதற்கும் சமுதாயத்தில் கல்வி வேலை வாய்ப்புகளை முறையாக பெறும் வகையிலும் மாற்றுத்திறனாளிகள் நலன் மற்றும் உரிமைகளுக்காக மாற்றுத்திறனாளிகள் அணி உருவாக்கவும்,இந்த இரண்டு அணிகளிலும் தலைமைக் கழகத்தின் ஆலோசனை பெற்று செயல்பட வேண்டும் எனவும்.

உடன்பிறப்பே என்ற ஒற்றை சொல்லால் நம்மையெல்லாம் ஒன்றிணைத்து அரவணைத்து அரை நூற்றாண்டு காலம் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு தலைமை தாங்கி சோதனைகளிலும், நெருக்கடிகளிலும் தொடர்ந்து வழி நடத்தி,இந்திய அரசியலை தீர்மானிக்கும் மாநில கட்சியாக தி.மு.க.வை வலிமைமிக்க இயக்கமாக உயர்த்தியவரும்,ஐந்து முறை முதலமைச்சராக பொறுப்பேற்று நவீன தமிழ்நாட்டை கட்டமைத்தவரும்,பன்முக ஆற்றல் கொண்ட படைப்பாளியாக,நிர்வாக திறன் மிக்கவராக விளங்கியவருமான முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் பிறந்த நாளான ஜூன் 3ம் அவர்களின் திருவுருவபடத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி நலத்திட்ட உதவிகள் வழங்கவும், செம்மொழி நாளாக மாவட்டம் முழுவதும் கொண்டாடுவது என்றும்.

கழகத்தின் தலைவராக பொறுப்பேற்றது முதல் எதிர் கொண்ட 2019 நாடாளுமன்றத் தேர்தல்,2020 ஊரக உள்ளாட்சித் தேர்தல், 2021 சட்டமன்றத் தேர்தல், 2022 நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல், 2024 நாடாளுமன்றத் தேர்தல், இடைத்தேர்தல் களங்கள் என அனைத்திலும் மகத்தான வெற்றியை கழகம் பெற்றிடும் வகையில் வியூகத்தை வழங்கி அந்த வெற்றிக்கு ஓயாது உழைத்திட்ட வரும் தமிழ்நாட்டு மக்களின் பேராதரவுடன் முதலமைச்சர் பொறுப்பை ஏற்று இந்தியாவுக்கே முன்னோடி யான திட்டங்களை தமிழ்நாட்டில் செயல்படுத்தி வருபவருமான கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களுக்கு பாராட்டுதலை தெரிவித்துக் கொண்டு,எதிர்வரும் 2026 சட்டமன்றத் தேர்தலில் கழக கூட்டணி முழுமையான வெற்றி பெற்று கழகத் தலைவர் அவர்கள் தொடர்ந்து முதலமைச்சர் பொறுப்பேற்க நாம் அனைவரும் அயராது உழைப்போம் என்றும்.

தமிழ்நாட்டின் எதிர்கால நம்பிக்கையாக மக்களின் பேராதர வை பெற்றுள்ள துணை முதலமைச்சர் இளம் தலைவர் சுமார் 200 இளம் பேச்சாளர்களை உருவாக்கி 100க்கும் அதிகமான நூலகங்களை இளைஞர் அணியால் உருவாக்கப்பட்டு முத்தமிழ் அறிஞர் பதிப்பகம் ஏற்படுத்தி அதன் மூலம் 20க்கும் மேற்பட்ட நூல்கள் வெளியிடவும் இளைஞர்கள் அறக்கட்டளை மூலம் நலிந்தோர் சுமார் 15 பேருக்கு மாதந்தோறும் கல்வி,மருத்துவ உதவி அளித்து சிறப்பான பணி செய்து வரும் தமிழ்நாடு துணை முதலமைச்சர், முதலமைச்சர் அவர்களுக்கு துணையாக நின்று சிறப்பு திட்டங்கள் நேர்த்தியான முறையில் மேற்கொள்வதுடன் விளையாட்டு துறையில் உலக தரத்திற்கு உயர்த்தி பல்வேறு போட்டிகளை நடத்தி வலிமைமிக்க இளைய சமுதாயத்தை உருவாக்கி வரும் கழகத்தின் இளம் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் செம்மாந்த பணிக்கு துணை நிற்க வேண்டும் என்றும்.

தமிழ் மொழிக்கும்,இனத்திற்கும் பண்பாட்டிற்கும் தொண்டாற்றிய தகைசால் தலைவர்களையும் தமிழ் சான்றோர் நினைவு கூறும் வகையில் தலைவர்களின் சிலைகள், நினைவிடங்கள்,மணிமண்டபங்கள் என தமிழகத்திற்கு பெருமை சேர்த்த தமிழர்களை போற்றும் கழக அரசுக்கு பாராட்டு தெரிவிப்பது என்றும்.

முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் அரசு பொறுப்பேற்றது முதல் பேருந்துகளில் மகளிர்,மாணவிகள், மாற்றுத்திறனாளிகள், திருநங்கைகள் ஆகியோர்க்கு கட்டணம் இல்லாத விடியல் பயணம். 1.14 கோடி இல்லத்தரசிகளுக்கு மாதம் 1000 ம் ரூபாய் வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் பெண்களுக்கு மாநிறத்துடன் இளஞ்சிவப்பு பிங்க் ஆட்டோ, புதுமைப்பெண் திட்டம், அரசு பணிகளில் பணியாற்றும் பெண்களுக்கு மகப்பேறு விடுப்பு, ஓராண்டு பணியாற்றும் பெண்களுக்கு தோழி விடுதி மற்றும் சமூக நீதித் திட்டங்கள் போன்ற எண்ணற்ற சமூக நலத்திட்டங்களைக் கொண்டு வந்து மக்களின் வாழ்வை மேம்படுத்தி சாதனைப்படுத்தி உள்ள முதலமைச்சர் அவர்களுக்கு பாராட்டு தெரிவித்துக் கொள்வது என்றும்.

உழவர்கள்,நெசவாளர்கள், மீனவர்கள் என அனைத்து தரப்பினரின் வாழ்விலும் புதிய விடியல் தந்து திராவிட மாடல் அரசின் சாதனைகளை பரப்புவது என்றும்.ஒவ்வொரு குடும்பமும் பயன்பெற்றுள்ள திராவிட மாடல் அரசின் சாதனை திட்டங்களை தொடர்ந்து மக்களிடம் எடுத்துரைக்க வேண்டும் எனவும்.

ஏழை,எளிய மக்களை வதைக்கும் நகை கடன் கட்டுப்பாடுகளை ரிசர்வ் வங்கி நீக்க வேண்டும் எனவும். தமிழ்நாட்டிற்கு தர வேண்டிய நிதியை தர மறுக்கும் ஒன்றிய அரசுக்கு கண்டனம் தெரிவிப்பது எனவும்,தமிழர்களின் மொழி உணர்வுடன் விளையாடாமல் இந்தி திணிப்பை கைவிட வேண்டும் எனவும்,சிறுபான்மையினர் உரிமைகளை பறிக்கும் நோக்கில் இஸ்லாமியர் சொத்துக்களை சூறையாடும் வக்பு திருத்த சட்டத்தை திரும்ப வேண்டும் எனவும். தமிழ்நாட்டின் நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தை குறைக்கும் மக்கள் தொகை அடிப்படையிலான தொகுதி மறுவரை முறை கூடாது எனவும்.

கீழடி ஆய்வை மறுக்கும் தமிழ் விரோத பா.ஜ.க அரசை கண்டித்தும், இரயில்வே திட்டங்களில் தமிழ்நாட்டை புறக்கணிக்கும் பா.ஜ.க அரசுக்கு கண்டனம் தெரிவித்தும், ஒன்றிய விசாரணை அமைப்புகளை தவறாக பயன்படுத்தும் பா.ஜ.க அரசை கண்டனம் தெரிவித்தும், அரசியல் அமைப்பு சட்டத்தை மதிக்காமல் உச்சநீதிமன்றத்தோடு மோதும் பா.ஜ.க அரசுக்கு கண்டனம் தெரிவிப்பது என்றும்.

ஜாதிவாரி கணக்கெடுப்பை விரைவாகவும்,முறையாகவும் நடத்திட வேண்டும் எனவும். உச்சநீதிமன்ற தீர்ப்பை முன்வைத்து கல்வியை மீண்டும் மாநில பட்டியலில் இனத்திட வேண்டும் எனவும்.

கழக உறுப்பினர்கள் யாராவது எதிர்பாராத விதமாக சாலை விபத்தில் இறந்து போகும் சூழல் ஏற்பட்டால் இறந்த உறுப்பினர்கள் குடும்ப வாரிசுகள் 21 வயதுக்கு குறைவாக இருந்தால் அந்த குடும்பத்திற்கு தலைமை கழகத்தின் சார்பில் ரூபாய் 10 லட்சம் நிவாரண நிதியாக வழங்கப்படும்.அந்த பிள்ளைகளின் படிப்பு குடும்ப சூழலுக்கு இந்த நிதி வழங்கப்படும். என அறிவித்த கழகத் தலைவருக்கு நன்றி தெரிவித்துக் கொள்வது என்றும்.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

# புதுக்கோட்டையில் 9 புதிய பேருந்து வழித்தடச் சேவைகள்!

## அமைச்சர்கள் எஸ்.ரகுபதி- – சிவ.வீ.மெய்யநாதன் – கே.கே.செல்லப்பாண்டியன் துவக்கி வைத்தனர்!

புதுக்கோட்டை, ஜூன் 6 -

புதுக்கோட்டை மாவட்டம்/ மாநகராட்சி, புதிய பேருந்து நிலையத்தில், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் சார்பில், 9 புதிய பேருந்து வழித்தட சேவைகளை, இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் 04.06.2025 அன்று கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.

பின்னர், இயற்கை வளங்கள் துறை அமைச்சர் தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதல மைச்சர் அவர்கள் பொதுமக்களின் பொருளாதாரத்தினை மேம்படுத்திடும் வகையில் எண்ணற்ற மக்கள் நலத் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில், தமிழகத்தின் முன்னோடித் திட்டமான, நகரப் பேருந்துகளில் மகளிர், திருநங்கை கள், மாற்றுத்திறனாளிகள், ஆகியோர்களுக்கான இலவச பேருந்து பயணத் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதன்படி, புதுக்கோட்டையில் இருந்து உப்பிலிக்குடிக்கும், புதுக்கோட்டையில் இருந்து சடையம்பட்டிக்கும், புதுக்கோட்டை யில் இருந்து தேனிப்பட்டிக்கும், புதுக்கோட்டை யில் இருந்து தொண்டைமான் ஊரணிக்கும், திருச்சியிலிருந்து புதுக்கோட்டை வழியாக பெருமகளூருக்கும், தஞ்சாவூரிலிருந்து புதுக்கோட்டை வழியாக மதுரைக்கும், பொன்னமராவதியில் இருந்து மேலத்தா னியத்திற்கும், அறந்தாங்கியில் இருந்து பெருமருதூருக்கும், கீரனூரில் இருந்து விராலி மலைக்கும் என மொத்தம் 9 புதிய பேருந்து வழித்தட சேவைகள் துவக்கி வைக்கப் பட்டது.

இதன்மூலம் புதுக்கோட்டை யிலிருந்து மற்ற பகுதிகளுக்குச் செல்லும் பொதுமக்கள் அனைவரும் மிகுந்த பயன் பெறுவார்கள். எனவே, தமிழக அரசின் மூலம் பொதுமக்களின் நலன் கருதி செயல்படுத்தப்பட்டுவரும் இத்தகைய புதிய பேருந்து சேவைகளை அனைவரும் உரிய முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் எனவும் அமைச்சர் எஸ். ரகுபதி தெரிவித்தார்.

பின்னர் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதல மைச்சர் அவர்கள் ஏழை, எளிய பொதுமக்களின் வாழ்க்கை தரத்தினை உயர்த்திடும் வகையில் பல்வேறு நலத் திட்டங் களை செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தின் சார்பில் பொதுமக்களின் அன்றாட போக்குவரத்திற்காக பேருந்து சேவைகள் நாள்தோறும் தொடர்ச்சியாக இயக்கப்பட்டு வருகிறது.

அதன் அடிப்படையில் 9 புதிய பேருந்து வழித்தட சேவைகளை இன்றைய தினம் துவக்கி வைக்கப்பட்டது. இதன்மூலம் புதுக்கோட்டையில் இருந்து பல்வேறு இடங்களுக்குச் செல்லும் பொதுமக்களுக்கு இப்பேருந்து சேவைகள் மிகவும் உதவிகரமாக அமையும்.

எனவே, பொது மக்களின் போக்குவரத்து வசதியினை எளிமையாக்கிடும் வகையில் இந்த பேருந்து சேவைகள் உரிய நேரங்களில் இயக்கிடும் வகையில் பணிகளை மேற்கொள்ள சம்மந்தப்பட்ட அரசு அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது எனவும் அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், , முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லப்பாண்டியன் , புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மரு.வை.முத்துராஜா,

மாவட்ட வருவாய் அலுவலர் அ.கோ.ராஜராஜன், புதுக்கோட்டை மாநகராட்சி துணை மேயர் எம்.லியாகத் அலி, பொது மேலாளர் (த.அ. போ.க.) கே.முகமது நாசர், மாவட்ட அறங்காவலர் குழுத் தலைவர் தவ.பாஞ்சாலன், முன்னாள் மாவட்ட ஊராட்சி குழு துணைத் தலைவர் த.சந்திரசேகரன், துணை மேலாளர்கள் பாலமுருகன் (நிர்வாகம்), ராஜேந்திரன் (தொழில்நுட்பம்), புதுக்கோட்டை கிளை மேலாளர் மணிவண்ணன், உதவிப் பொறியாளர் (இயக்கம்) தில்லைராஜ், புதுக்கோட்டை வட்டாட்சியர் மு.செந்தில் நாயகி, மண்டல துணை வட்டாட்சியர் ஆ.லட்சுமணன் மற்றும் எம்.எம்.பாலு, நைனா முகமது, க.மதியழகன் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

### மொடக்குறிச்சி

# சரஸ்வதி எம்.எல்.ஏ. மகள் திருமதி கருணாம்பிகை மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஜூன் 5 -

மொடக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் சரஸ்வதியின் மகள் திருமதி கருணாம்பிகை மறைவையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு :-

மொடக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் சரஸ்வதி அவர்களின் மகள் கருணாம்பிகை அவர்கள் மறைந்த செய்தியறிந்து மிகவும் வருந்தினேன்.

பெற்ற மகளை இழந்து வாடும், திருமிகு. சரஸ்வதி அவர்களுக்கும், அவரது குடும்பத்தினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளார்.

### திருவண்ணாமலை வடக்கு மாவட்டம்

# போளூர் மத்திய ஒன்றியக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

## தலைமைக் கழக அறிவிப்பு!

திருவண்ணாமலை வடக்கு மாவட்டம், போளூர் மத்திய ஒன்றியக் கழகச் செயலாளர் ஏ.சுப்பிரமணியன் அவர்கள், வயது முதிர்வின் காரணமாக சரிவர கழகப் பணியாற்ற இயலாத நிலையில், அவரை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, கழகப் பணிகள் செவ்வனே நடைபெற **இரா.மகேஷ்**, (பிராமணர் தெரு, போளூர் வட்டம், திருவண்ணாமலை மாவட்டம்) அவர்கள் போளூர் மத்திய ஒன்றிய கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றியக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை – 18
நாள் : 05.06.2025


**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

# கழக முன்னோடி எடமேலையூர் சு.கோவிந்தராசு மறைவு!

## எஸ்.எஸ்.பழநிமாணிக்கம் – ச.முரசொலி எம்.பி. அஞ்சலி!

திருவாரூர், ஜூன்.6–

திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் தெற்கு ஒன்றியம், எடமேலையூர் கண்டியர் தெருவில் வசித்து வந்த கழக முன்னோடி, முன்னாள் கழக மாவட்ட பிரதிநிதி சு.கோவிந்தராசு. (வயது 84) அவர்கள் உடல் நல் குறைவால இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.



சு.கோவிந்தராசு அவர்களின் மறைவிற்கு, கழக உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர் முன்னாள் மத்திய அமைச்சர் எஸ்.எஸ். பழனிமாணிக்கம், ச.முரசொலி எம்.பி, சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் ஒரத்தநாடு பி.இராசமாணிக்கம், மன்னார்குடி ராஜகோபால சுவாமி திருக்கோவில் அறங்காவலர் குழு தலைவர் சி இளவரசன், மாவட்ட முன்னாள் ஊராட்சி தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு, நகர் மன்ற தலைவர் மன்னை. த. சோழராஜன், மன்னார்குடி நகரச் செயலாளர் வீரா.கணேசன், நீடாமங்கலம் தெற்கு ஒன்றிய செயலாளர் நா.கவியரசு, முன்னாள் மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் சிவா.ராமமூர்த்தி, முன்னாள் பொதுக்குழு உறுப்பினர் வ.முத்துராமகிருஷ்ணன், கிளைக் கழக செயலாளர் மதியழகன், கழக முன்னோடிகள், கழக சார்பு அணி நிர்வாகிகள், தோழமைக் கட்சி நிர்வாகிகள் கலந்துகொண்டு அன்னாரின் உடலுக்கு மாலை அணிவித்து அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொண்டனர்.



முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு தென்காசி வடக்கு மாவட்டம் குருவிகுளம் கிழக்கு ஒன்றிய தி.மு.க சார்பில் வெங்கடாசலபுரம் கிராமத்தில் குருவிகுளம் கிழக்கு ஒன்றிய செயலாளர், நக்கலமுத்தன்பட்டி ஊராட்சி மன்ற தலைவர் பெ.குணசேகரன் ஏற்பாட்டில் அன்னதானம் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்வில் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. பங்கேற்று அன்னதானத்தை வழங்கினார். நிகழ்வில் மாவட்ட பொருளாளர் இல சரவணன், திருவேங்கடம் பேரூர் கழக செயலாளர் மாரிமுத்து, ஒன்றிய துணைச் செயலாளர் தினேஷ் , ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் புளிவை கோபிநாத், மாவட்ட பிரதிநிதிகள் முத்தையா, ஆனந்தராஜ்,அய்யாசாமி,கிளைக் கழக செயலாளர்கள் கருப்பசாமி, பாக முகவர் சிகாமணி, சந்திரன், இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ரஞ்சித் குமார், கார்த்திக் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க அலுவலகத்தில்,மாவட்ட அவைத் தலைவர் முருகன் தலைமையில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாளை முன்னிட்டு நடைபெற்ற நிகழ்வில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த தலைவர் கலைஞர் அவர்களின் திரு உருவப் படத்திற்கு,நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர்,பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வஹாப் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார். உடன் மத்திய மாவட்ட துணைச் செயலாளர்கள் சுரேஷ், தர்மர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் பேச்சிப்பாண்டியன், மேயர் ராமகிருஷ்ணன், துணை மேயர் ராஜு, நடராஜன், (கிழக்கு)தினேஷ், அப்துல் கையும்,பிரபு பாண்டியன்,சுதாமூர்த்தி, சுப்பிரமணியன் (துச்சநல்லூர் தெற்கு),சங்கர் குமார் (துச்சநல்லூர் வடக்கு),அண்டன் செல்லத்துரை (பாளையங்கோட்டை வடக்கு),துபாய் சாகுல் ஹமீது (மேலப்பாளையம் மேற்கு), சாமுவேல் (மேலப்பாளையம் கிழக்கு), வழக்கறிஞர் சங்கர் (நெல்லை பேட்டை மேற்கு), மானூர் மேற்கு அன்பழகன்,கிழக்கு அருள்மணி, தெற்கு கல்லூர் மாரியப்பன், பேச்சி குட்டி, செல்வபாபு, ரேவதி பிரபு (துச்சநல்லூர்)மகேஸ்வரி நெல்லை), கதிஜா இக்லாம் பாசிலா (மேலப்பாளையம்)மற்றும் வட்டக் கழக நிர்வாகிகள்,உள்ளாட்சி பிரதிநிதிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள் மற்றும் திரளான கழக உடன் பிறப்புகள் கலந்து கொண்டு மரியாதை செலுத்தினர்.